# இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

சிற்றுண்டிச்சாலைகள் , நலன்புரிக்கடைகள் மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் போட்டோ பிரதி கடைகள் என்பவற்றினை நடாத்துவதற்கான விலைமனு கோரல் 2024/2025

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பின்வரும் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் நலன்புரிக்கடைகளை ஒரு வருடத்திற்கு நடாத்துவதற்கு அனுபவம் வாய்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றது.

1. சிங்கராஜ விடுதி சிற்றுண்டிச்சாலை
2. பிரதான சிற்றுண்டிச்சாலை
3. புதிய வளவ விடுதி சிற்றுண்டிச்சாலை
4. கபேரியா சிற்றுண்டிச்சாலை
5. விவசாய விஞ்ஞான பீட சிற்றுண்டிச்சாலை
6. பணியாளர் சிற்றுண்டிச்சாலை
7. சமனல விடுதி சிற்றுண்டிச்சாலை
8. முகாமைத்துவ கற்கைகள் பீட நலன்புரிக்கடை
9. சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள் பீட நலன்புரிக்கடை
10. தொழில்நுட்ப பீட நலன்புரிக்கடை
11. முகாமைத்துவ கற்கைகள் பீட போட்டோ பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை
12. விவசாய விஞ்ஞான பீட போட்டோ பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை
13. பிரயோகவியல் விஞ்ஞான பீட போட்டோ பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை
14. மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலை- இரத்தினபுரி (பட்டுகேன வளாகம்)
15. மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலை- இரத்தினபுரி (கல்கடுவவற்ற வளாகம்)
16. மருத்துவ பீட போட்டோ பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடை- இரத்தினபுரி

விலைமனு கோரல் ஆவணங்களை (1-14, சிங்கள மொழியில்) மீளப்பெறமுடியாத கொடுப்பனவாக ஒவ்வொன்றுக்கும் ரூபா.500.00 இனை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற சிட்டையினை பொது வேலை நாட்களில் 2023.12.21 திகதி முதல் 2024.01.11 திகதி வரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 வரையான காலப்பகுதியில் சிரேஸ்ட உதவிப்பதிவாளர் கல்விசார் மற்றும் மாணவர் சேவைகள் பிரிவிற்கு சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலை மற்றும் போட்டோ பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடைக்கான விலைமனு கோரல் ஆவணங்களை (15-17, சிங்கள மொழியில்) மீளப்பெறமுடியாத கொடுப்பனவாக ஒவ்வொன்றுக்கும் ரூபா.500.00 இனை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழதிற்கு ஆதரவாக இலங்கை வங்கியின் கணக்கு இல. 2246976 ற்கு வைப்புச்செய்து பெற்ற சிட்டையினை இரத்தினபுரியிலுள்ள ள(கல்கடுவவற்ற வளாகம்) மருத்துவ பீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட மனுக்களை நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சிரேஸ்ட உதவிப்பதிவாளர்- கல்விசார் மற்றும் மாணவர் சேவைகள் பிரிவு, தபால் பெட்டி இல 3.00, பெலிகிலோயா எனும் முகவரிக்கு 2024.01.12.ஆம் திகதியில் அல்லது அத்திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடது மேல் மூலையில் சிற்றுண்டிச்சாலையின் அல்லது நலன்புரிக்கடையின் அல்லது போட்டோ பிரதி மற்றும் காகிதாதி எழுதுபொருட்கள் கடையினது பெயர் குறிப்பிடல் வேண்டும்.

மனுதிறத்தலானது சிரேஸ்ட உதவிப்பதிவாளர்- கல்விசார் மற்றும் மாணவர் சேவைகள் பிரிவ, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகிலோயா எனும் முகவரியில் 2024.01.12 ஆம் திகதி பி.ப. 3.15 மணிக்கு இடம்பெறும். இதில் மனுதாரர்கள் அல்லது மனுதாரர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்க முடியும். இது தொடர்பில் பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுவின் முடிவே இறுதியானது மற்றும் பெறுகை நடவடிக்கையின் எந்தவொரு நிலையிலும் விமர்சிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

புதிவாளர்
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
தபால் பெட்டி இல 02
பெலிகிலோயா
2023.12.21